Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/51/2024**

## ஆயர் சுற்றுமடல்

# இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான இறைவேண்டல் நாள் - மார்ச் 22, 2024

ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!
அன்பு இறைமக்களே!

''அமைதிக்கான இறைவேண்டல் என்பது ஒரு சிலரின் பொறுப்பல்ல மாறாக ஒட்டு மொத்த மனித குடும்பத்தின் பொறுப்பு'' எனத் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார் (பிப்ரவரி 4,2024 ஞாயிறு மூவேளை உரை).

இந்த வருடம் பெங்களூருவில் கூடிய 36-வது இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையானது, ''நாட்டின் தற்போதைய சமூக அரசியல் நிலைமை மற்றும் செயற்கை நுண்ணறிவின் நன்மைகளும் சவால்களும்: திருச்சபையின் பதில்'' என்ற மையக் கருத்தைக் கொண்டு சிந்தித்து கலந்தாலோசித்தது. பகுத்தாய்ந்து செபித்து நமது நாட்டின் இன்றைய நலனில், இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில், ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்ற நம் நாட்டின் தத்துவம் சிதைந்து வரும் சூழலின் நிகழ்வுகளை நினைத்து கவலையும் கொண்டது.

இன்று நாம் வகுப்புவாதம், அடிப்படைவாதம், மதவாதம், பாசிசம், ஒற்றைக் கலாச்சார திணிப்பு, வெறுப்புக் கலாச்சாரம், சாதியம் போன்றவற்றின் கோரப்பிடியில் சிக்கி மிகக் கடினமான சூழலில், ஒரு வித அச்ச உணர்வோடு வாழ்வதற்குப் பழக்கப்பட்டுக் கொண்டே வருகிறோம்.

இயல்பான நமது சுதந்திர உணர்வு, அரசியலைப்பு தரும் பல்வேறு உரிமைகள் நம்மை விட்டு வேகமாக அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலச் சூழலில் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையான ஜனநாயக உணர்வோடு மதச் சார்பற்ற நாட்டில் வாழ்வது கனவாகிவிடுமோ என்ற ஏக்கமும் நிலவுகிறது.

'ஒன்றியத்தில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்னும் நிலை மறைந்து, ஒற்றைத்தன்மை கல்வித் தொடங்கி கலாச்சாரம் வரை திணிக்கப்படுவதைக் காண்கிறோம். பன்மைத்தன்மையே படைப்பின் நோக்கம் என்பதையும், நம் நாட்டின்

அரசியல் தத்துவம் என்பதையும் தவிர்த்து, எல்லாம் ஒன்றே என்ற குடையின் கீழ் இணைக்கும் சதி திட்டமிட்டு அரங்கேற்றப்படுவது நாம் காணும் சமூகச் சூழலாகும்.

இந்நிலை மாறவும், 'யாவரும் கேளிர் என்ற பொதுமை உணர்வு பாதுகாக்கப்படவும் நமது இந்திய நாட்டிற்காய் மார்ச் மாதம் 22-ஆம் தேதி வெள்ளிக்கிழமையை நோன்பும் இறைவேண்டலுக்குமான நாளாகச் செலவிட இந்திய ஆயர் பேரவை நமக்கு அழைப்பு விடுத்துள்ளது. நமது இறைவேண்டல், நம் நாட்டின் ஒற்றுமையை சமூக, சமய நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பட்டும். கீழ்காணும் சில இறைவேண்டல் வழிமுறைகளை ஆயர் பேரவைப் பரிந்துரைக்கிறது. இவற்றை நாமும் பின்பற்றி நம் பங்குகளில் இந்திய நாட்டின் நலனுக்காகவும் விரைவில் வரவிருக்கும் பொதுத்தேர்தலில் நாட்டை மதச்சார்பின்மையிலும் ஜனநாயகத்திலும் வழிநடத்தும் தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவும் வேண்டுவோம்.

1. தொடர் ஜெபமாலை
2. இறை இரக்க நவநாள் மற்றும் செபமாலை
3. இரவு விழிப்புச் செபம்
4. சிலுவைப் பாதை
5. நற்கருணை ஆராதனை
6. 40 மணி நேர நற்கருணை ஆராதனை

இந்த இறைவேண்டல் முயற்சி நமது இந்திய நாட்டில் அமைதியையும், சமய சமூக நல்லிணக்கத்தையும் கட்டி எழுப்பும் கருவியாய் மாறுவதாக!

ஆயர் இல்லம்
12.03.2024

என்றும் ஈசோ மெசியாவில்

✠மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலை 17.03.2024, ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் அறிவிப்பின் போது வாசிக்க வேண்டும்.